சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
30.08.2020 ஞாயிற்றுக்கிழமை

## யாழ்.போதனா மருத்துவமனையில் நான்காம் மாடியிலிருந்து வீழ்ந்த பெண் சாவு

யாழ்ப்பாணம், ஒக.30
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நான்காம் மாடியிலிருந்து வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்து ள் 2

## இலங்கையில் அனல் நிலை!

கொழும்பு, ஒக. 30
இலங்கையில் நேற்றுமுன்தினம் முதல் சூரியன் உச்சமடைய ஆரம்பித்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள 2

## கண்டியில் நிலஅதிர்வு

கொழும்பு, ஒக. 30
இன்று முன்னிரவு வேளையில் கண்டி மாவட்டத்தின் சில பிரதேசங்களில் சிறிய அளவில் நில அதிர்வு உணரப்பட்டது என்று புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரி 2



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக

# கண்ணீர் மல்கியது தமிழர் தாயகம்



யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 30
காணாமல் ஆக்கப்பட்டோரின் தினமான இன்று, வடக்குக் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக தமிழர்கள் தாயகம் கண்ணீர் மல்க கவனவீர்ப்பில் ஈடுபட்டது. 2

## கண்டியில் நேற்று ஏற்பட்டது இயற்கை நிலநடுக்கமல்ல!

### விசாரணைகள் ஆரம்பமாகின

கொழும்பு, ஒக. 30
இலங்கையில் நேற்று இரவு ஏற்பட்ட நில அதிர்வு இயற்கையான செயற்பாடு அல்லவென தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கண்டி மாவட்டத்திலுள்ள ஹாரகம, மைலபிட்டிய, திகன பிரதேசங்களில் நேற்று இரவு 8.30 மணியளவில் நில 2

## கோப் தலைமையும் ஆளுங்கட்சி வசமே!

கொழும்பு, ஒக. 30
'கோப்' என்றழைக்கப்படும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் தலைவராக ஆளுங்கட்சி அமைச்சரொருவரே நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது. நாடாளுமன்றத்தில் செயற்படும் குழுக்களில் மிகமுக்கிய குழுவாக கோப் குழு கருதப்படுகின்றது. கடந்த ஆட்சியின்போது இந்தக் குழுவின் தலைமைப் பதவி எதிரணி உறுப்பினராக இருந்த சுனில்ஹந்துனெத்திக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனை 2

## புதினம் தெரியுமோ?

தேர்தல் காலத்தில ஒட்டிப் பிறந்த இரட்டையராகத் திரிந்த 'சூனா சீனா' கூட்டணி இப்போது முந்தின மாதிரி ஒட்டுறவு இல்லை எண்டு பரவலாக் கதை அடிபடுகுது. எலக்சனில வெண்ட பிறகு வீட்டுக்கார அப்புக்காத்து தனித்தவில் வாசிக்க வெளிக்கிடுறார். கிளிநொச்சியில எலக்சனில அப்புக்காத் துவை சோடி சேர்த்துக் கொண்டு தான் வாத்தியார் கூட்டம் வைச்சவர். ஆனாலும் போனமுறை விழுந்தமாதிரி நாலாயிரத்துச் சொச்ச வாக்குகள் தான் இந்த முறையும் அப்புக்காத்துவுக்கு விழுந்திருக்கு. அதால வாத்தியாரோட போனது துளியளவும் பிரயோசனமில்லை எண்டும், தான் 2

3 தசாப்தங்களுக்கு பின்னர்

# மாகாண சபை தேர்தலில் ஏற்படவுள்ள மாற்றம்!

கொழும்பு, ஒக. 30
இலங்கை அரசியல் வரலாற்றில் மூன்று தசாப்தங்களுக்குப் பிறகு இரு புதிய அரசியல் கட்சிகளின் அரசியல் அதிகாரப் போட்டிக்கு மத்தியிலேயே இம்முறை மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இலங்கை யில் 1988 ஏப்ரல் 28ஆம் திகதியே முதன்முதலாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டது. வடமேல், வடமத்திய, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாண சபைகளுக்கே அந்தத் தினத்தில் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் களமிறங்கி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக்கட்சி நடைபெற்று 2



## கொழும்பின் துணைஆயராக ரஞ்சித் ஆண்டகை திருநிலை

கொழும்பு, ஒக. 30
கொழும்பு மறைமாவட்டத்தின் புதிய துணை ஆயராக பேரருட்திரு அன்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை இன்று திரு நிலைப் 2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்





# கண்ணீர் மல்கியது...

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் ஓகஸ்ட் 30ஆம் திகதியான இன்று உலகளவில் கடைப்பிடிக்கப்படுகின்றது. இலங்கையிலும் வடக்கு - கிழக்கில் பெரும் எழுச்சியுடன் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இறுதிப்போர் இடம்பெற்றபோதும் அதற்கு அண்மைய காலப்பகுதியிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. புலிகளுக்கு எதிரான இறுதிப்போரை முன்னெடுத்தவர்கள் தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பீடத்தில் இருக்கின்ற நிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டங்கள் முக்கியத்துவம் மிக்கனவாகப் பார்க்கப்படுகின்றன. 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்', 'காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும்', 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்' என்று இந்தக் கவனவீர்ப்பில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்தன. போராட்டங்களில் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், இன்னாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-6,26)

# மாகாண சபை தேர்தலில்...

முடிந்த பொதுத்தேர்தலில் படுதோல்வியடைந்துள்ளது. 'ஆளும்கட்சி', 'பிரதான எதிர்க்கட்சி' என்ற இரு அந்தஸ்துகளையும் அக்கட்சி இழந்துள்ளது. எனவே, மாகாணசபைத் தேர்தலில் 'பிரதான' எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி களமிறங்கவுள்ளது. 1988இல் நடைபெற்ற பொதுத்தேர்தலை சுதந்திரக்கட்சி புறக்கணித்திருந்தாலும் அதன்பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்டது. மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தையும் சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டணி கைப்பற்றியிருந்தது. கடைசியாக நடைபெற்ற தேர்தலில்கூட வடக்கு, கிழக்கு மாகாணங்களைத்தவிர ஏனையவற்றை சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே கைப்பற்றி ஆட்சியமைத்தது. எனினும், அக்கட்சியும் இன்று 'ஆளும்கட்சி, 'பிரதான எதிர்க்கட்சி' என்ற அந்தஸ்தை இழந்துள்ளது. மொட்டு கட்சியுடன் இணைந்தே போட்டியிட உத்தேசித்துள்ளது. ஆகவே, ஆளுங்கட்சி என்ற அந்தஸ்த்துடன் பெரமுனவே போட்டியிடவுள்ளது. கடைசியாக நடைபெற்ற தேர்தலில் வடக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும், கிழக்கு மாகாணசபையின் அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸிடமும் இருந்தது. (ம-44)

# கோப் தலைமையும்...

அடிப்படையாகக்கொண்டு அந்தப் பதவியை இம்முறை எதிரணிக்கு வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி சபையில் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும், இதற்கு ஆளுங்கட்சி உடன்படவில்லை எனவும், அமைச்சர் ஒருவருக்கே அப்பதவி வழங்கப்படவுள்ளது எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. அத்துடன், அரச கணக்குக் குழுவின் தலைமைப்பதவியும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவருக்கே வழங்கப்படவுள்ளது. 8ஆவது நாடாளுமன்றத்தில் இக்குழுவின் தலைவராக லசந்த அழகியவன்ன செயற்பட்டார். அவர் அப்போது சுதந்திரக்கட்சியின் சார்பில் அரசாங்கத்துடன் இணைந்திருந்தார். இம்முறை மொட்டுக் கட்சி உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார். (ம-44)

# கண்டியில்...

வித்துள்ளது.
கண்டி மாவட்டத்தின் ஹாரகம, திகண, மைலாப்பிட்டிய ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இது குறித்த அப்பகுதி மக்கள் அச்சமடையத் தேவையில்லை என அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (மஇ)

## நான்காம்...

ளார் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்தது. சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடும் பெண் அந்தப் பெண், வீழ்ந்தபோது தலையில் வெடிப்பு ஏற்பட்டு உணர்வற்ற நிலையில் காணப்பட்டார். உடனடியாகவே மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவமனைத் தரப்பு தெரிவித்தது.
பளையைச் சேர்ந்த பரமேஸ்வரன் பரிசிற்ற குருசு (வயது - 39) என்பவரே உயிரிழந்தார். அவர் மூன்று பிள்ளைகளின் தாய். நான்காம் மாடியிலுள்ள 14ஆம் இலக்க விடுதியில் அவர் பணியில் ஈடுபட்டிருந்தவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப தகவல்கள் தெரி வித்தன. இது தற்செயலாக இடம்பெற்றதா அல்லது உயிர்மாய்ப்பா அல்லது வேறு காரணமா என்பது பற்றி விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன (த-26)

# கண்டியில் நேற்று...

அதிர்வு உணரப்பட்டதாக புவியியல் ஆய்வு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனினும் இந்தச் சம்பவம் இயற்கையான நில அதிர்வு அல்ல என ஆய்வு நிறுவனத்தின் சுனாமி எச்சரிக்கை நிலையத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
கண்டி, பல்லேகல பிரதேசத்தில் அமைந்துள்ள நில அதிர்வு அளவீட்டில் மட்டுமே சில சமிக்ஞைகள் பதிவாகியுள்ளதாகவும் இது இயற்கையான சம்பவம் அல்ல என அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சிறப்புக் குழுவொன்று விசாரணை நடத்தி வருகின்றது. (ம-இ)

## புதினம் தெரியுமோ

**போகேக்க ரண்டு பேருக்கும் வாக்குப் போடுங்கோ எண்டு சொன்ன வாத்தியார், பிறகு போய் தனக்கு மட்டும் போடச்சொன்ன கதையும் அப்புக்காத்தருக்கு தெரிஞ்சிட்டு. அதால இந்தமுறை வெ(ற்)றி கொண்ட்டாட்டங்களை வாத்தியாருக்குத் தெரியாமல் தனியப் போய் வைக்கத் தொடங்கியிருக்கிறார். அதவிட நேற்றையான் மத்தியகுழுக் கூட்டத்தில அப்புக்காத்தருக்கு 'மல்ரிபரல்' அடி இருக்கெண்டது வாத்தியாருக்கு விளங்கிட்டுது. அதால அங்க நிண்டும் அப்புக் காத்துக்கு சப்போர்ட் பண்ணாட்டியும் சிக்கல், பண்ணினாலும் சிக்கல். அதால வாத்தியார் தனக்கு மத்திய குழுக் கூட்டத்த விட்டு கலியாண வீடொண்டுக்கு முக்கியமாக போகோணும் எண்டு ஆள் வெளிக்கிட்டுப் போட்டுது. இதையெல்லாம் அப்புக்காத்துவும் அவதானிச்சுப் போட்டு எனக்கு முதலே தெரியும் வாத்தியின்ர குணம். இனி நாங்களும் தனி ரூட் தான் போக வேணும் எண்டு சொன்னாராம். சந்தர்ப்பவாதக் கூட்டு எண்டா இப்பிடி நடக்கிறது சகஜம் தானே.**

**– பட்சி**

# கொழும்பினது ...

படுத்தப்பட்டார்.
கொழும்பு லூசியாஸ் பேராலயத்தில் இன்று காலை நடைபெற்ற ஆயத்துவ திருப்பொழிவு திருப்பலி வழிபாட்டின் போது கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையால் அவர் திருநிலைப்படுத் தப்பட்டார்.
ஜூலை மாதம் 13ஆம் திகதி திருத்தந்தை பிரான்ஸிஸ் இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பை வத்திக்கானிலிருந்து வெளியிட்டிருந்த நிலையில் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை இன்று திருநிலைப்படுத் தப்பட்டார். இன்றைய சிறப்புத் திருப்பலியில் யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட ஆயர்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அருட்தந்தையர்கள் கன்னியாஸ்திரிகளும் பங்குபற்றியிருந்தனர். (ம-இ)

# இலங்கையில்...

ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
நாட்டில் 11 நாள்களுக்கு சூரியன் உச்சம் கொடுப்பதன் காரணமாக வெப்பநிலை 38 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கவுள்ளது. நேற்றைய தினம் முல்லைத்தீவு மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதிகளுக்கு சூரியன் உச்சம் கொடுத்துள்ளது. வடக்கில் ஆரம்பமாகிய சூரிய உச்சம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை நாடு முழுவதும் இருக்கும் என்றுள்ளது. (மஇ)

# விக்கி அடங்காவிடின் தமிழருக்கும் ஆபத்து

## சஜித் அணி முன்னெச்சரிக்கை

கொழும்பு, ஓக. 30

சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் விக்னேஸ்வரன் தொடர்ந்து கருத்து வெளியிட்டால் பாரிய விளைவுகளை அவர் சந்திக்க வேண்டி வரும். அதனால் தமிழ் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனைத் திருத்தவே முடியாது. அவரின் கருத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவும் நியாயப்படுத்துகின்றார். விக்னேஸ்வரனுக்கு ஒத்து ஊதுபவராக சபாநாயகர் இருக்கும் போது அவரை (விக்னேஸ்வரனை) நாம் எப்படித் திருத்த முடியும்?' விக்னேஸ்வரன் நாடா



ளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரையில் சர்ச்சைக்குரிய பகுதிகளை ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறு சபாநாயகரிடம் சபையில் வைத்து நாம் கோரிக்கை விடுத்தி ருந்தோம். ஆனால், சபாநாயகர் அது விக்னேஸ்வரனின் கருத்துச் சுதந்திரம் என்றும், உரையை நீக்க முடியாது எனவும் கூறியுள்ளார். இந்தத் துணிவில் விக்னேஸ்வரன் தனது உரையை நியாயப்படுத்தும் வகையில் மீண்டும் சபையில் எமக்குச் சவால் விட்டுப் பேசியுள்ளார். அவரைத் திருத்தவே முடியாது.

முன்னாள் முதலமைச்சர் ஒருவருக்கு சபையில் எந்த விடயத்தைப் பேசுவது என்று தெரியாமல் இருக்கின்றது. இவரையெல்லாம் முதலமைச்சராகத் தெரிவு செய்து பின்னர் அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த வடக்கு மக்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இலங்கையில் மீண்டும் இனக்கலவரத்தைத் தூண்டும் வகையில் விக்னேஸ்வரன் சபையில் உரையாற்றி வருகின்றார்.

வடக்கில் போர் இடம்பெற்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த காலத்தில் கொழும்பில் பாதுகாப்பாகத் தூங்கி எழுந்தவர்தான் இந்த விக்னேஸ்வரன். இவருக்குப் போரின் வலி தெரியாது. இப்படிப்பட்டவரை வடக்கு மக்கள் ஏன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தார்கள் என்று எமக்குத் தெரியாமல் இருக்கின்றது.

சிங்கள மக்களின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் விக்னேஸ்வரன் தொடர்ந்து கருத்து வெளியிட்டால் பாரிய விளைவுகளை அவர் சந்திக்க வேண்டி வரும். அதனால் தமிழ் மக்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டிவரும்' என்றார். (ம-22)



## உளவியல் மேம்பாட்டு செயற்றிட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான இரு நாள் உளவியல் மேம்பாட்டு செயற்திட்டம் வவுனியா வரோட் அமையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 12 முதல் 15 வயது வரையான மாணவர்களுக்காக மனித தேவைகளும் விருப்பங்களும், கிரகித்தல் இயலளவு, வழிகாட்டல், குழுச் செயற்பாடு, கொரோனா விழிப்புணர்வு நாடகம், குழுப் பண்புகள், பொது அறிவின் முக்கியத்துவம் எனும் தலைப்புக்களுடனும், 16 முதல் 18 வயது வரையான மாணவர்களுக்காக தலைமைத்துவம், புத்தாக்க செயற்பாடுகள் மற்றும் சவால்களுக்கு முகம் கொடுத்தல் எனும் தலைப்புகளுடனும் செயற்றிட்டம் நடைபெற்றது.

மாணவர்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் விதமாக இந் நிகழ்வில், இடையிடையே புத்துணர்வூட்டும் விளையாட்டுக்கள் மற்றும் குழுச் செயற்பாடுகளும் இடம் பெற்றன. நிகழ்வில் உளவள ஆலோசகர்களான அன்டனி பிரசன்னா மற்றும் திருமாள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ந-222)

## 322 இலங்கையர்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, 30

மத்திய கிழக்கு நாடுகளான ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காக சென்ற 322 இலங்கையர்கள் இன்று தாயகம் திரும்பியுள்ளனர்.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 280 இலங்கையர்களும், கட்டாரின் டோகாவிலிருந்து 42 இலங்கையர்களும் நாட்டை வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தப்படமை குறிப்பிடத்தக்கது. (ற)

## கொரோனாத் தொற்றாளர்கள் 2,995 ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 30

இலங்கையில் 6 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாட்டின் தற்போதைய மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,995 ஆக உயர்வடைந்துள்ளது என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. அத்துடன் கொரோனாத் தொற்றுக்குள்ளான 7 பேர் நேற்றுக் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர். இதனால் கொரோனா தொற்றுக்குள்ளாகி குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2,849 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 136 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேநேரம் வைரஸ் தொற்றுச் சந்தேகத்தின் பேரில் 71 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

## தென்கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு செப்ரெம்பரில்

கொழும்பு, ஓக.30

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 13ஆவது வருடாந்த பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் செப்ரெம்பர் 16மற்றும் 17ஆம் திகதிகளில் ஒலுவில் வளாகக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது எனப் பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல்சத்தார் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 16ஆம் திகதி காலை அமர்வில் பிரயோக விஞ்ஞான பீட மற்றும் பொறியியல் பீட பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறும். அன்றைய தினம் பிற்பகல் கலை கலாச்சார பீட பட்டதாரிகளுக்கு பட்டமளிக்கப்படவுள்ளது.

இரண்டாம் நாள் அமர்வாக செப்டம்பர் 17ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீடத்திற்கான பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், பிற்பகல் முகாமைத்துவ வர்த்தக பீட பட்டதாரிகள் பட்டங்களைப் பெறவுள்ளனர். இந்த நிகழ்வில் மேற்படி ஐந்து பீடங்களினதும் 988 உள்வாரிப் பட்டதாரிகள் பட்டங்களைப் பெறவுள்ளதுடன், 22 பேர் வியாபார நிர்வாக முதுமாணிப் பட்டத்தையும் 3 பேர் முதுகலைமாணி பட்டத்தையும் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## பண மோசடி: ஐவர் கைது

கொழும்பு, ஓக.30

கனடாவில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்த கட்டுநாயக்க பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட்ட 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பெண் பலரிடம் இருந்து ஐந்து மில்லியன் ரூபா வரை வசூலித்து மோசடி செய்துள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவரது விளம்பரத்திற்கு ஏற்ப தொடர்பு கொண்டவர்கள், வங்கிக்கணக்குகளைத் திறந்து கடவுச்சீட்டு மற்றும் பிறப்புச் சான்றிதழின் நகல்களை மட்டும் சமர்ப்பிக்குமாறு கூறப்பட்டுள்ளனர். இதையடுத்து அந்தப் பெண் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி, வைப்புத்தொகையாளர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தை எடுத்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ந-இ)

## முகப்புத்தகக் களியாட்டத்தில் கலந்து கொண்டோர் கைது

கொழும்பு,ஓக. 30

முகப்புத்தகக் களியாட்டத்தில் கலந்து கொண்ட இரண்டு பெண்கள் உள்ளிட்ட 28 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காலிஅக்மீமன பிரதேசத்திலுள்ள விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகப் புத்தக விருந்தில் கலந்துகொண்ட இரண்டு பெண்கள் உள்ளிட்ட 28 பேரையே பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேலும், கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து போதைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)





இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையினால் 1000 மரக் கன்றுகள் நடும் செயற்றிட்டத்தின் கீழ் நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் மர நடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ந-222)

# போதைக்கு அடிமையானவர்கள் ஐந்து லட்சத்தைத் தாண்டினர்!

கொழும்பு, ஓக.30

நாட்டில் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்தைக் கடந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் இதனைத் தெரிவித்துள்ளார். மேல் மாகாணத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட அனைத்துக் குற்றச் செயல்களையும், கட்டுப்படுத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து கொழும்பில் இன்று நடைபெற்ற செயலமர்வில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் குறித்த ஐந்து லட்சம் பேரில் 25 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். இதேவேளை, போதைப்பொருளுக்கான பணம் கையடக்க தொலைபேசிகள் ஊடாகவே பரிமாற்றிக்கொள்ளப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# பேருந்து ஊழியர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஓக.30

மேல் மாகாணத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு எரிபொருள் நிரப்புவதற்காகச் செல்லும் பேருந்து ஊழியர்களுக்கு தண்டனை வழங்கப்படவுள்ளதுடன் அப் பேருந்துகளுக்கான அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதிகார சபையின் தலைவர் பிரசன்ன சன்ஜீவ தெரிவிக்கையில், எரிபொருள் நிரப்புவதற்கு பயணிகளை அழைத்துச் செல்வது மிகவும் ஆபத்தானது என்பதுடன் பாதுகாப்பும் அற்றது. பேருந்துகளுக்கு அவசியமான எரிபொருள்களை முன்கூட்டியே பெற்றுக் கொள்வது ஊழியர்களின் பொறுப்பாகும். பேருந்துகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக பயணிகளுடன் எரிபொருள் நிலையத்திற்கு செல்வதென்பது ஆபத்தான குற்றமாகும். அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ந-இ)

# தனிமைப்படுத்தலில் தப்பித்தவர் கேகாலையில் கைது

கொழும்பு, ஓக.30

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற 80 வயதான வயோதிப பெண்ணொருவர் கேகாலை பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதால் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தலையீட்டில் முல்லேரியா தேசிய மனநல நிறுவகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த வயோதிப் பெண்ணுடன் தொடர்பைப் பேணியிருந்த கேகாலை விற்பனை நிலையம் ஒன்றின் 7 பணியாளர்களை தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவுமட தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)





## தொண்டமானின்
# 107வது பிறந்த தினம் நேற்று அனுஷ்டிப்பு

கொழும்பு, ஓக.30

மலையகத்தின் மாமனிதன் என்று அழைக்கப்படும் மூத்த தொழிற்சங்க மற்றும் அரசியல்வாதியான அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 107வது பிறந்த தினம் நேற்று சனிக்கிழமை கொழும்பு மற்றும் மலையகத்தின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டது. பிறந்த தினத்தை முன்னிட்டு பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தார்.

இந் நிகழ்வுகளில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் நிதி செயலாளருமான மருதபாண்டி ராமேஷ்வரன், முன்னாள் ஊவா மாகாண அமைச்சரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான், முன்னாள் மத்திய மற்றும் ஊவா மாகாண சபை உறுப்பினர்கள், மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானின் 107வது பிறந்த தினத்தை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவானில் மலையக வரலாறு பற்றிய பல அபூர்வ தகவல்களை அறிந்துகொள்ளக்கூடிய வகையில் காணொலிக் காட்சிகளுடன் கூடிய மாபெரும் ஆவணக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந)

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

மஹியங்கனை, ஓக.30

மஹியங்கனை பகுதியிலுள்ள குளமொன்றில் நீராடச் சென்ற ஒருவர் நேற்று மாலை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். கண்டி மடுல்கலை கலாபொக்க தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்த நபர், தனது தாய் மற்றும் மனைவியுடன், மனைவியின் சொந்த இடமான மஹியங்கனைக்குச் சென்றிருந்த நிலையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரியவருகின்றது. உயிரிழந்தவரின் சடலம் மஹியங்கனை பொது வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)



மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் வரணி ரட்ணா முன்பள்ளிக்கு, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஞா.திலகராணியால் அலுமாரி ஒன்று நேற்று சனிக்கிழமை வழங்கப்பட்டது. (ந-159)

# போதைக் கடத்தல்: இருவர் கைது

கொழும்பு, ஓக.30

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் ஹன்வெல்ல பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடமிருந்து சுமார் ஒரு மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப்பொருட்கள், ஒரு கார், போதைப்பொருள் கடத்தல் தொடர்பான தகவல்கள் அடங்கிய புத்தகம் மற்றும் பல ஏ.ரி.எம் கார்டுகள் என்பவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவர் எனவும், மற்றையவர் மாலபேயில் உள்ள ஒரு தனியார் பல்கலைக்கழகத்தின் மாணவர் எனவும் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவித்துள்ளனர். (ந-இ)



பெற்றோரை இழந்த நிலையில் 18 வருடங்களுக்கு மேலாக வவுனியா வேப்பங்குளம் இந்து அன்பகத்தில் வாழ்ந்து வந்த இரு பெண்களுக்கு அன்பகத்தின் பொறுப்பாளர் சாமிஅம்மா தலைமையில் இன்று காலை திருமணம் இடம்பெற்றது. இவர்களுக்கான திருமண நிகழ்வு வேப்பங்குளம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமிகள் இந்து அன்பக மண்டபத்தில் நடைபெற்றது. ஒருவருக்கு வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவும் அவரது துணைவியாரும் தாய் தந்தையராகவும், மற்றையவருக்கு வவுனியா நகரசபைச் செயலாளர் இராசையா தயாபரனும் அவரது துணைவியாரும் தாய் தந்தைராகவும் பொறுப்பேற்று கன்னிகாதானம் செய்து திருமணத்தை நடத்திவைத்தனர். (ற-110)

# எச்.ஐ.வி.நோயால் பாதிக்கப்படும் ஆண்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஒக.30



இலங்கையில் எச்.ஐ.வி தொற்று நோயால் பாதிக்கப்படும் ஆண் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என தேசிய எஸ்.டி.டி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் இயக்குநர் வைத்தியர் ராசஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 19முதல் 25 வயது வரையான எச்.ஐ.வி உறுதியான ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நாடு முழுவதும் எச்.ஐ.வி நோயாளிகள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் குறித்து தேசிய எஸ்.டி.டி. எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி ஆண் நோயாளிகளின் எண்ணிக்கையில் படிப்படியான உயர்வு காணப்பட்டுள்ளது. அத்துடன், இந்த ஆண்டு (2020) நிலவரப்படி இலங்கையில் 3600 எச்.ஐ.வி தொற்று உறுதியான நோயாளிகள் இருக்கின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள அவர், 2000 எச்.ஐ.வி நேர்மறை நோயாளிகள் 2000 பேர் மட்டுமே தேசிய எஸ்.டி.டி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தில் பதிவு செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மீதமுள்ள 1600 பேர் சிகிச்சைபெறாமல் சமூகத்தின் மத்தியில் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள அவர், அந் நோயாளிகளால் மற்றவர்களுக்கு வைரஸ் பரவும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும் வைத்தியர் ராசஞ்சலி ஹெட்டியாராச்சி மேலும் கூறியுள்ளார். (ந-இ)





# திருமலையிலும் கவனயீர்ப்பு

திருகோணமலை, ஒக.30

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்கள் தினமான இன்று திருகோணமலையிலும் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலை உள்ள ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் நீதி வேண்டி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளுடன் கலந்துரையாடியிருந்தார். (வ)





# இரண்டு வயது சிறுமி துஷ்பிரயோகம்

அனுராதபுரம், ஒக.30

இரண்டு வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் ஒன்று அனுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிறுமி முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு இருதய நோய்ச் சிகிச்சை பெறுவதற்காக சென்று, மீண்டும் வீடு திரும்புவதற்கு பஸ் வசதி கிடைக்காததால் பேருந்து நிலையத்தில் தனது தாய் மற்றும் தந்தையுடன் உறங்கிக்கொண்டிருந்தபோதே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ஐ)





# மொரிஷியஸ் எண்ணெய்க் கசிவு: 40 டொல்பின்கள் உயிரிழப்பு

மொரிஷியஸ் கடலில் ஜப்பான் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பலில் இருந்து எண்ணைய் கசிந்ததைத் தொடர்ந்து இதுவரை 40 டொல்பின்கள் இறந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அண்மையில் மொரீசியஸ் தீவுகளை அண்மித்த கடற்பகுதியில் எண்ணெய்க் கப்பலொன்று விபத்துக்குள்ளானது. இதனால் சுமார் ஆயிரம் தொன் எண்ணெய் கடலில் கசிய ஆரம்பித்தது. இதன் காரணமாக அந்தப் பகுதி சுற்றுச்சூழல் அவதானம்மிக்க வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை மொரிஷியஸ் கடற்கரையில் 17 டொல்பின்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கின. இதற்கு விளக்கமளித்த மொரிஷியஸின் மீன்வளத்துறை அமைச்சகம், இறந்த டொல்பின்களின் தாடைகளைச் சுற்றி பல காயங்களும் இரத்தமும் இருந்ததால், அவற்றின் சிறப்புக்கு எண்ணெய்க் கசிவு காரணமல்ல என்று மறுப்பு தெரிவித்திருந்தது. இந்நிலையில், இதுவரை 40 டொல்பின்கள் இறந்துள்ளன. 200க்கும் அதிகமான டொல்பின்கள் எண்ணெய்க் கசிவில் சிக்கியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# உணவகம் இடிந்து வீழ்ந்து 29 பேர் உயிரிழப்பு



*பீஜிங், ஓக.30*

வடக்குச் சீன கிராமத்தில் உள்ள இரண்டு மாடி உணவக கட்டடம் நேற்று இடிந்து வீழ்ந்ததில் 29 பேர் உயிரிழந்துள்ளனர் . இதனை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். இவ் விபத்தில் மேலும் 28 பேர் காயமடைந்தனர் எனவும், அவர்களில் 7 பேர் பலத்த காயமடைந்துள்ளனர் எனவும் சீனாவின் அவசரநிலை மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மொத்தம் 57 பேர் உயிருடன் வெளியே கொண்டுவரப்பட்டனர் எனவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் மோப்ப நாய்கள், கிரேன்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப சென்சார்களைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கையை முன்னெடுத்து உள்ளனர். (வ)



# இஸ்தான்புல் நகரில் நிகழ்வுகளுக்கு தடை

*இஸ்தான்புல், ஓக.30*

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் திருமண நிகழ்வுகள் உட்பட அனைத்து வகையான நிகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாளை முதல் குறித்த தடை நடைமுறைப்படுத்தப்படுமென துருக்கி அரசாங்கம் அறிவித்துள்ளது. அங்கு கொவிட் - 19 தொற்று பரவல் அதிகரித்துள்ளமையே இதற்கு காரணமாகும். இதே வேளை இந்தோனேஷியாவில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அந்நாட்டில் இதுவரை ஒரு இலட்சத்து 69 ஆயிரத்துக்கும் அதிக மானோர் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். மூவாயிரத்து 261 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# அரச அங்கீகாரம்: ஊடகவியலாளர்களுக்கு மறுப்பு

*மின்ஸ்க், ஓக.30*

பெலாரஸில் ஊடகவியலாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் அங்கீகாரமானது ஒரு சில ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் மறுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டச் செய்திகளை வெளிநாட்டு ஊடகங்களுக்கு வழங்கிய ஊடகவியலாளர்களுக்கான அங்கீகாரமே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளது. இதில் பி.பி.சி மற்றும் ரஷ்ய ஊடகவியலாளர்களும் அடங்குகின்றனர். இந்தச் செயலை சர்வதேச ஊடகங்கள் கண்டித்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அரசினால் வழங்கப்படும் அங்கீகாரத்தை மீண்டும் வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளன. ஊடகவியலாளர்களை அடக்குவதற்கான முயற்சியாக இதனைக் காண்பதாக ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது. (வ)



# சம்பியனானார் ஜோகோவிச்

நியூயோர்க், ஒக.30



சின்சினாட்டி பகிரங்க ரென்னிசின் இறுதிப்போட்டியில் சேர்பியாவின் ஜோகோவிச், கனடா வீரர் ராவ் னிக்கை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். சின்சினாட்டி பகிரங்க சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெ ரிக்காவின் நியூயோர்க் நகரில் நடை பெற்றது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் உலகின் தலைசி றந்த முதன்மை வீரரான நோவக் ஜோகோவிச், கனடாவை சேர்ந்த மிலோஸ் ராவ்னிக்கை எதிர்கொண்டார்.

இதில் ராவ்னிக் முதல் செட்டை 1-6 என்ற கணக்கில் கைப்பற்றினார். அதன்பின்னர் அதிரடியாக ஆடிய ஜோகோவிச் அடுத்த 2 செட்களையும் கைப்பற்றி அசத்தினார்.

இறுதியில், ஜோகோவிச் 1-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ராவ்னிக்கை வீழ்த்திய துடன், சாம்பியன் பட்டத்தையும் கைப்பற் றினார். (ந)

---

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளை யாட்டுக்கழக அணி சம்பியன் பட்டம்வென்றது. இந்தப் போட்டி வல்வெட்டித்துறை கருணாகர ரன் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீ வன்ஸ் விளையாட்டுக்கழக மக ளிர் அணியும், கருணாகரன் விளை யாட்டுக்கழக மகளிர் அணியும் மோதின. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மகளிர் அணி 20:7 என்ற கணக்கில் வெற்றி பெற் றுச் சம்பியனானது. (ந-108)



# சுழற்கேடயத்தை சுவீகரித்தது ஐயனார் கழகம்

வவுனியா, ஒக.30

மாபெரும் கடினபந்து துடுப்பாட்ட போட்டியில் சுழற்கேட யத்துக்கான கிண்ணத்தை ஐயனார் விளை யாட்டுக்கழகம் சுவீகரித்துக்கொண்டது. வன்னி மாவட்டத்தின் சுழற்கேடயத்துக்கான கடினபந்துத் துடுப்பாட்டப் போட்டி வவுனியா நகரசபை மைதானத் தில் நேற்று இடம்பெற்றது.

ஐயனார் விளையாட்டுக்கழகத்துக்கும் ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் தொடர்ச்சி யாக நான்கு வருடங்களாக இந்தச் சுற்றுப்போட்டி இடம்பெற்று வருகின்றது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஐயனார் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய ஜங்ஸ் ரார் விளையாட்டுக்கழக அணியினர் 29.2 என்ற பந்துப ரிமாற்றங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஐயனார் விளையாட்டுக்கழகம் சார்பாக கவிராஜ் 04 இலக்குகளையும், சத்தியராஜ் 03 இலக்குக ளையும் பெற்றுக்கொண்டனர். 93 ஓட்டங்கள் பெற் றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஐயனார் விளையாட்டுக்கழக அணி 12.5 என்ற பந்துப்பரிமாற்றத் துக்கு மூன்று இலக்குகளை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக் காமல் இருந்து மிதுன் 42 ஓட்டங்களையும், அனுசன் 26 ஓட்டங்களையும் பெற்று அணியினை வெற்றிக்கு இட்டுச்சென்றனர். (ந-110)



---



# மஞ்சள் கடத்தல்; அறுவர் கைது

கொழும்பு, ஒக.30

சட்டவிரோதமான முறை யில் மஞ்சளை நாட்டுக் குள் கொண்டுவர முயற் சித்த 6 சந்தேகநபர்கள் புத்தளம் கல்பிட்டி கடற்ப ரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை ஊடகப் பிரிவு குறிப்பிட் டுள்ளது.

அந்த நபர்களிடம் இருந்து 1428 கிலோகிராம் மஞ் சள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், டிங்கிப் பட கொன்றும் கைப்பற்றப் பட்டுள்ளது எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ)

# நாளாந்தம் 800 பஸ்கள் சேவையில் ஈடுபடுவதில்லை

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.30

இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய 800 பஸ்கள் நாளாந்தம் சேவையில் ஈடுபடுவதில்லை என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித் துள்ளார். சாரதிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமை காரணமாகவே இந்தச் சேவையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது வரை 300 சாரதிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் விரைவில் சேவையில் இணைத் துக்கொள்ளப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கும் தட்டுப்பாடு காணப்படுகின்றன எனவும், தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். கொரோனாத் தொற்றுக் காரணமாக சொந்த இடங்களுக்குச் சென்ற தனியார் பஸ் பணியாளர்கள் மீண்டும் பணிகளுக் குத் திரும்பவில்லை. தனியார் பஸ்களின் வருமானம் குறைவடைந்துள்ளமையே பணியாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பாமைக்கான காரணம் என்றும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித் துள்ளார். (ந-இ)

# சதுப்பு நிலப்பகுதி அழிப்பு; விசாரணைக் குழு நியமிப்பு

கொழும்பு, ஒக.30

ஆனைவிழுந்தான் சரணா லயத்தின் சதுப்பு நிலப் பகுதி அழிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்வதற்கு ஐவர் அடங் கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என வனஜீவராசிகள் அமைச்சு தெரிவித்துள் ளது. அந்தக் குழு வனஜீவ ராசிகள் அமைச்சர் சீ.பி ரத்னாயக்கவினால் நியமிக் கப்பட்டுள்ளது. (வ)

---

# பூமியை அண்மிக்கும் சிறுகோள்

வொஷிங்டன், ஒக.30

22 முதல் 49 மீட்டர் (72 மற்றும் 160 அடி) விட்டம் கொண்ட ஒரு சிறுகோளொன்று செவ்வாயன்று பூமியை அண்மித்துப் பயணம் செய்யும் என்று நாசா தெரி வித்துள்ளது. செப்டெம்பர் 1ஆம் திகதி பூமியை அண்மித்து பயணம் செய்யும் ‘2011 ES4’என்ற இக் கோளானது சந்திரனை விட நமது கிரகத்திற்கு நெருக்கமாக இருக்கும் என்றும் நாசா தெரி வித்துள்ளது. சந்திரன் பூமியைச் சுற்றி வரும்போது 3.84 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் பயணம் செய்யும்.

ஆனால் இக் கோள் 1.2 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்தில் பூமியை அண்மித்து பயணம் செய்யவுள்ளது. எனினும் இது பூமியைத் தாக்குவதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது எனத் தெரி விக்கப்படுகிறது. (வ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 30.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.